வாக்குமூலம்

நீதிமன்றம் – கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்

அமர்வு வழக்கு எண்:68/2024 நாள்: 22.07.2026

அரசு தரப்பு சாட்சி : 3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பூபதி | தாலுக்கா | : பெரியகுளம் |
| கணவர் பெயர் | : பாண்டி | தொழில் | : கூலி வேலை |
| ஊர் | : பெரியகுளம் | வயது | : 44/2026 |

(1, 3,4,6 எதிரிகள் ஆஜர். 5 ஆம் எதிரி ஆஜர் இல்லை. 355 BNSS மனு சமர்ப்பிக்கப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது )

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 2023 ம் ஆண்டு, பாரதீய நாகரிக் சுரக் ஷா சன்ஹிதா பிரிவு 254 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

அரசு தரப்பில் 3 ம் சாட்சியின் முதல் விசாரணை:–

நான் அழகர்சாமிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்து போன விஜயராஜன் எனது மகன் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். 2 ஆம் எதிரி அருண்குமார்என்பவரை தெரியும். அவர் இறந்து விட்டார். 5 ஆம் எதிரி பிரதீப் குமார் என்பவரை தெரியும். கடந்த 12.04.2023 ஆம் தேதி நான் அழகர்சாமிபுரத்தில் உள்ள எனது வீட்டில் இருந்தேன். எனது மகன் விஜயராஜன் வெளியே சென்று விடுவதாக சொல்லிவிட்டு சென்றார். அன்றைய தினம் மதியம் சுமார் 02.30 மணியளவில் அண்ணன் மகன் பிரசாந்த் என்பவர் என் கணவருக்கு போன் செய்தார். விஜயராஜன் என்பவரை 6 பேர்கள் அடித்து கொலை செய்து விட்டார்கள் என்று போன் மூலம் சொன்னார். அதன் பிறகு நான், என் கணவர், மதன்குமார், செல்வம், மச்சான் முருகன், ஆகியோர்கள் மலையாகாரத்தோப்புக்கு சென்றோம். அங்கு சென்று பார்த்த போது என் மகனை 6 பேர் சேர்ந்து அரிவாள் வைத்து உடல் முழுவதும் வெட்டி இருந்தார்கள். தலையில் வெட்டுப்பட்டு இருந்தது. கழுத்தை அறுத்து விட்டார்கள். வலது உள்ளங்கையில் இருந்து முழங்கை வரை வெட்டி இருந்தார்கள். எனது மகன் உடல்

முழுவதும் இரத்தக்கோலத்தில் கிடந்தார். அனைவரும் கூடி விட்டார்கள். அதன்பிறகு போலீசாருக்கு போன் செய்தார்கள்.108 ஆம்புலன்ஸ் வந்தது. அவர்கள் பிணத்தை திருப்பி பார்த்து விட்டு கா.விலக்கு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்குகொண்டு சென்றார்கள். கா.விலக்கு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்ற பிறகு போன் செய்த எனது மருமகன் பிரசாந்த் என்பவரிடம் கேட்டேன். அவர் 6 பேர் சேர்ந்து கொலை செய்து விட்டு அரிவாளுடன் தோப்பின் வழியாக ஓடி கொண்டு இருந்தார்கள் என்று சொன்னார். எதற்காக வெட்டினார்கள் என்று கேட்டதற்கு காசு கொடுக்கல் வாங்கல் பிரச்சனை என்று சொன்னார். கொலை செய்த 6 பேர் யார் என்று கேட்டுதெரிந்து கொண்டேனா என்றால் அடையாளம் தெரியும். அந்த 6 பேரில் 4 பேர் ஆஜர் எதிரிகள் தான். ஒரு எதிரி வரவில்லை. ஒரு எதிரி இறந்து விட்டார். அதன் பிறகு காவல் நிலையத்திற்கு பாண்டி, மதன் குமார், நான், செல்வம், முருகன் ஆகியோர்கள் சென்றோம். பிரபாகரனை வைத்து புகார் எழுதி காவல் நிலையத்தில் கொடுத்தோம். அதன் பின்பு கா.விலக்கு அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று பிரேதத்தை பெற்றுக்கொண்டு அடக்கம் செய்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர் ஆகி குறுக்கு விசாரணை இல்லை என்று எடுத்து கூறியதன் பேரில் எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை இல்லை என முடிக்கப்பட்டது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(Sd/- C. Sankar)
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.